## ஆரணி நாடாளுமன்றத் தொகுதி கழக வேட்பாளர் தரணிவேந்தனை ஆதரித்து

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் செய்யாறில் மக்களிடையே வாக்குச் சேகரிப்பு!



## தலைவர் தலைமையில்

# ‘திராவிட மாடல்’ அரசு வெல்லட்டும்! பாசிசம் ஒழியட்டும்!

### காஞ்சிபுரம் அண்ணா இல்ல வருகைப் பதிவேட்டில் –

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சூளுரை வாசகம்!







காஞ்சிபுரம், மார்ச் 27 –

கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் காஞ்சிபுரம் ‘அண்ணா இல்லத்தில்’ நேற்று முன்தினம் மாலை, பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்துவணங்கியபின்னர், அங்குவைக் கப்பட்டுள்ளவருகைப்பதிவேட்டில், “தலைவர் தலைமையில் திராவிட மாடல் அரசு வெல்லட்டும்! பாசிசம் ஒழியட்டும்!” எனும் எழுச்சிமிகு வாசகத்தை எழுதி, சூளுரைத்தார்.

இந்நிகழ்வின்போது–காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் –அமைச்சர் தா.மோ.அன்பரசன், தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., கழக மாணவரணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ., காஞ்சிபுரம் நாடாளுமன்றத் தொகுதி கழக வேட்பாளர் க.செல்வம், கழக இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர் ப.அப்துல்மாலிக் ஆகியோர் உடனிருந்தார்கள்.

அப்பதிவேட்டில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எழுதியதாவது :



Visitors Book

| Date | Visitors Name | Contact No. | E-mail / Address | Your Valuable Comments & Suggestions |
|---|---|---|---|---|
| 25/03/24. | உதயநிதி ஸ்டாலின் | | | பேரறிஞர் அண்ணா பிறந்த காஞ்சி இல்லத்தில் இருந்து ‘மாநில உரிமைகளை மீட்க.. தலைவரின் குரல்’ எனும் கட்ட நாடாளுமன்ற பிரச்சாரப் பயணத்தை துவக்குவதில் பெருமை கொள்கிறோம். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் புகழ் தங்கிய நம் தலைவர் தலைமையில் திராவிட மாடல் அரசு வெல்லட்டும். பாசிசம் ஒழியட்டும். I BELONG TO THE DRAVIDIAN STOCK. (கையொப்பம்) 25/03/24. |



திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் ‘இந்தியா’ கூட்டணிக் கட்சிகளின் சார்பாக திருச்சி நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் ம.தி.மு.க. வேட்பாளர் துரை வைகோ அறிமுகம் மற்றும் செயல் வீரர்கள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி தலைமை வகித்தார். மத்திய மாநகர செயலாளர்கள் அன்பழகன், மதிவாணன் ஆகியோர் வரவேற்றனர். இதில் கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு, தெற்கு மாவட்டச் செயலாளரும் பள்ளி கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டத்துறை அமைச்சர் ரகுபதி, சட்டமன்ற உறுப்பினர்கள் சௌந்தரபாண்டியன், பழனியாண்டி, கதிரவன், ஸ்டாலின் குமார், இனிகோ இருதயராஜ், வை.முத்துராஜா, முன்னாள் எம்.எல்.ஏ. அன்பில் பெரியசாமி மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் ஆகியோர் முன்னிலையில் ம.தி.மு.க. வேட்பாளர் துரை வைகோவை அறிமுகம் செய்து வைத்தனர். திருச்சி தொகுதி ம.தி.மு.க. வேட்பாளர் துரை வைகோ, நிர்வாகிகள் மற்றும் பொதுமக்களிடம் ஆதரவு கோரினார்.





தூத்துக்குடியில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் வீதிவீதியாக வாக்குச் சேகரித்தார். மாவட்டச் செயலாளர் – அமைச்சர் திருமதி. கீதா ஜீவன் உடனுள்ளார்.